

# பெண் பணியாளர்களுக்கு மெகா குடியிருப்பு வளாகம்!

## திராவிட மாடல் அரசு

83

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

இந்தியாவிலேயே பன்முகத்தன்மையுடன் தொழில் துறைக்கு சாதகமான எல்லா அம்சங்களும் ஒருங்கே அமையப்பெற்ற மாநிலம், தமிழ்நாடு. நம்முடைய மாநிலத்தில் 39 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக்கின்றன. இதனால், உற்பத்தியும் அதிகம், வேலைவாய்ப்புகளும் அதிகம். குறிப்பாக, இந்தியாவிலேயே வேறெந்த மாநிலத்தையும்விட தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கையும் தமிழ்நாட்டில்தான் அதிகம். அதாவது, தமிழ்நாட்டின் தொழில்துறை வேலைவாய்ப்புகளில் 42 சதவிகிதம் பெண் தொழிலாளர்கள் உள்ளனர்.

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கும் அதே நேரத்தில், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு தேவையான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்குத் தொடர்ந்து பல்வேறு முயற்சிகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு முன்னணித் தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டின் சிப்காட் தொழிற்பூங்காக்களில் புதிய உற்பத்தி ஆலைகள் அமைத்து வருவதால், மாநிலத்தின் நிலையான முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் அதிகரித்து வருகிறது. குறிப்பிட்ட மண்டலங்களில் அமைந்துள்ள சிப்காட் தொழிற் பூங்காக்கள் மற்றும் முக்கிய தொழில் நிறுவனங்களின் வருகையினால் துறை சார்ந்த தொகுப்புகளாக உருப்பெற்றுள்ளன.

### ஃபாக்ஸ்கான் உற்பத்தி ஆலை

அந்த வகையில், உலகிலேயே மிகப்பெரிய மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தி நிறுவனமான தைவான் நாட்டைச் சார்ந்த ஃபாக்ஸ்கான், திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்காவில் சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் இரண்டு உற்பத்தி அலகுகளை நிறுவியுள்ளது.

இந்த நிறுவனத்தில் தற்போது 41 ஆயிரம் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றர். அவர்களில், 35 ஆயிரம் பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தொழிலாளர்கள் அனைவரும், வெவ்வேறு இடங்களில் தங்கி பணிக்கு வருவதில், பல நடைமுறைச் சிக்கல்கள் இருந்து வருகின்றன.

பொதுவாக, பெண் பணியாளர்களுக்கு தங்கும் விடுதிகள் பற்றாக்குறை, பாதுகாப்பு, தரமான உணவு ஆகியவற்றில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக அவ்வப்போது போராட்டம், சாலைமறியல் என சட்ட ஒழுங்குச் சிக்கல்களும் ஏற்பட்டன. தவிர, தங்குமிடச் சிக்கல்கள் காரணமாக பெண் பணியாளர்கள் வேலையில் இருந்து விலகுவதும் தொடர்கதையாக இருந்தன.

### தங்கும் விடுதிகள்

இதையடுத்து சிப்காட் வளாகங்களில், தங்கும் விடுதிகள் அமைக்க முடிவு செய்த அரசு, சிப்காட் மூலமாக இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர், திருப்பூர் மாவட்டம், நெருப்பெரிச்சல் ஆகிய இடங்களில் மூன்று தங்கும் விடுதிகளை அமைத்து செயல்படுத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக திருப்பெரும்புதூர் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களுக்காக சிப்காட் சார்பில், ரூ. 707.50 கோடி மதிப்பீட்டில் சிப்காட் மெகா குடியிருப்பு வளாகம் கட்ட அரசு திட்டமிட்டது.

அதற்காக, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் வடகால் கிராமத்தில் 20 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. திட்ட மதிப்பீட்டில், ரூ 498 கோடி ரூபாய், பாரத ஸ்டேட் வங்கியிடம் தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது. இந்த வளாகம் சுமார் 22.48 இலட்சம் சதுர அடி பரப்பிலான இடத்தில் தரைத்தளம் மற்றும் 10 அடுக்குமாடிக் கட்டடமாக எழுந்துள்ளது.

மொத்தம் 13 பிரிவுகளைக் கொண்ட இந்தக் கட்டடத்தில். ஒவ்வொரு பிரிவிலும் 1,440 நபர்கள் தங்கும் வகையில் 240 அறைகள் அமைந்துள்ளன. அனைத்து அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளும் அமைக்கப்பட்டன. 18 ஆயிரத்து 720 படுக்கைகள் அமைக்கப் பட்டுள்ளன.

### ஃபாக்ஸ்கான் குடியிருப்பு

இந்தியாவிலேயே முதன்முறையாக சிப்காட் சார்பில் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த மெகா குடியிருப்பு வளாகத்தை முழுவது மாக பயன்படுத்திக் கொள்ள ஃபாக்ஸ்கான் நிறுவனம் முன்வந்துள்ளது.

இதையடுத்து, ஃபாக்ஸ்கான் (M/s. Foxconn Hon Hai Technology India Mega Development Private Limited) நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் மூலம் ஃபாக்ஸ்கான் நிறுவனத்தில் பணியாற்றும் பெண் பணியாளர்கள் அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்ட நவீன குடியிருப்புகளில் தங்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

கடந்த, 17.08.2024 அன்று திருப்பெரும்புதூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்த வளாகத்தைத் திறந்து வைத்து பார்வையிட்டதுடன், பெண் பணியாளர்களுக்கு குடியிருப்புக்கான சாவிகளை வழங்கினார்.

அப்போது பேசிய முதலமைச்சர் அவர்கள், “ஆணுக்குப் பெண் சமம் என்பதைத் தாண்டி ஆண்களைவிட கூடுதலாக பெண் தொழிலாளர்கள் இருப்பதை, பெண் எனும் பேராற்றலுக்குத் தரும் முக்கியத்துவமாகவே பார்க்கிறேன்.

இந்த வசதிகளை நன்றாகப் பயன்படுத்திக் கொள்வதோடு, உங்கள் சொந்தக் குடியிருப்புகளை எவ்வளவு கவனமாகப் பராமரிப்பீர்களோ, அதே அளவுக்கு இந்த விடுதிகளையும் சிறப்பாகப் பராமரிக்க முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என்று தொழிலாளத் தோழர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்” என வேண்டுகோளும் வைத்தார்.

தமிழ்நாடு ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதார பலம் கொண்ட மாநிலமாக உருவாக வேண்டும் என்கிற இலக்குடன் திராவிட மாடல் அரசு வேலை செய்து வருகிறது. அதற்கு தொழிலாளர் தோழர்களின் நலனும் முக்கியம் என உணர்ந்த அரசு நம் திராவிட மாடல் அரசு. அதனால்தான், தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே தொழிலாளர்களுக்கு நவீன வசதிகள் கொண்ட தங்குமிடத்தைத் தந்து வருகிறது.

ஒரு தந்தையைப் போல, சகோதரரைப் போல பெண் பணியாளர்களின் நலனில் நம் முதலமைச்சர் காட்டும் அக்கறை, இன்னும் பல ஆயிரம் பெண்களைச் சொந்த உழைப்பில் நிற்க வைக்கும்.

...சாதனை தொடரும்



### வளாகத்தில் உள்ள வசதிகள்

- 13 பிரிவுகளைக் கொண்ட இந்தக் கட்ட டத்தில். ஒவ்வொரு பிரிவிலும் 3 மின்தூக்கிகள் என மொத்தம் 39 மின்தூக்கிகள் மற்றும் ஒவ்வொரு பிரிவிலும் தலா ஒரு ஜெனரேட்டர் வசதியும் உருவாக்கப்பட்டுள்ளது. தடையற்ற மின்சாரம் வழங்கும் வகையில், 33 KVA துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
- சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, நவீன தீயணைப்பு வசதிகள், உட்புறச் சாலைகள், தெருவிளக்குகள், 2.70 MLD கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது
- பொது சமையலறை, 4 ஆயிரம் பேர் அமரும் வகையிலான உணவுக்கூடம், 5 இடங்களில் நாப்கின் எரியூட்டி.
- திறந்தவெளி பொழுதுபோக்கு மையம், வண்ண மலர்செடிகள், மரங்கள், செயற்கை நீரூற்று அமைப்புகள் அமைந்துள்ளன.
- 1,170 கண்காணிப்பு கேமராக்கள்.
- பல்பொருள் விற்பனை அங்காடிகள் அமைப்பதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

## சிறக்கும் சிப்காட் வளாகங்கள்!



**ஒரு தந்தையைப் போல, சகோதரரைப் போல பெண் பணியாளர்களின் நலனில் நம் முதலமைச்சர் காட்டிய அக்கறை, இன்னும் பல ஆயிரம் பெண்களைச் சொந்த உழைப்பில் நிற்க வைக்கும்.**

### சமூக நீதியில் இயல்பாக நடக்கும்!

தலித் முதல்வர் தேவையா? தமிழ்நாட்டில் சாத்தியமா? என்கிற கேள்விகளுடன் எழுத்தாளர் விஜயபாஸ்கர், தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

தற்போதுள்ள அரசியல், சமூகச் சூழலில் சாத்தியமில்லை எனக் கூறும் அவர், தலித் முதல்வர் தேவையா என்ற கேள்விக்குத் தேவையில்லை என்ற பதில் நிச்சயம் யாரிடமும் இருக்கக் கூடாது. ஆனால், ஒரு தலித் முதல்வரை விட ஒட்டுமொத்த தலித் மக்களின் உயர் கல்வி பதிவு விகிதம் முக்கியம். ஒட்டுமொத்த தலித் மக்களின் தாய் சேய் இறப்பு விகிதம் முக்கியம்.

ஒரு தலித் முதல்வரை விட, ஒட்டுமொத்த தலித் மக்களின் கல்வி விகிதம் முக்கியம். ஒட்டுமொத்த தலித் மக்களின் கண்ணியமான வாழ்வு முக்கியம். இழிவு வேலைகளைச் செய்ய தலித் மக்களைக் கட்டாயப்படுத்தாமல் இருப்பது முக்கியம். ஒட்டுமொத்த தலித் மக்களின் இடஒதுக்கீடு முக்கியம்.

ஒரு தலித் முதல்வரை விட, ஒட்டுமொத்த தலித் மக்களில் எத்தனை பேர் மருத்துவர்களாக இருக்கிறார்கள் என்பது முக்கியம். ஒட்டுமொத்த தலித் மக்களில் எத்தனை பேர் தொழில்முனைவோர்களாக இருக்கிறார்கள் என்பது முக்கியம்.

ஒரு தலித் முதல்வரை விட, ஒட்டுமொத்த தலித் மக்களில் எத்தனை பேர் குரூப்-1 குரூப்-2 (Group-1, Group-2) பதவிகளில் இருக்கிறார்கள் என்பது முக்கியம். ஒட்டுமொத்த தலித் மக்களில் எத்தனை பேர் நீதிபதிகளாக, வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள் என்பது முக்கியம். ஒட்டுமொத்த தலித் மக்களில் எத்தனை பேர் ஆசிரியர்களாக, பேராசிரியர்களாக, பொறியாளர்களாக இருக்கிறார்கள் என்பது முக்கியம்.

இவை அனைத்திலும் தமிழ்நாட்டின் சராசரி என்னவோ, அதனை ஒட்டிய எண்ணிக்கையில் தலித் மக்களின் பங்கு இருக்க வேண்டும், அதுவே நம் லட்சியம். அதுவே சமூக நீதி.

இப்போது மிக இயல்பாக பட்டியல் சாதியைச் சேர்ந்தவர் தலைமைச் செயலாளராக வந்துள்ளதைப் போன்று மிக இயல்பாக தலித் முதல்வரும் வருவார். அது, தலித் மக்களின் வாழ்நிலையை மற்றவர்களுக்கு இணையாக உயர்த்தும் சமூகநீதிச் செயல்பாட்டின் ஒரு விளைவாக, இயல்பாக நடக்கும் செயல்.

### ஃப்ளாஷ்பேக்



#### குழந்தைகளுடன் ஆதரவு!



து.கோவிந்தசாமி

1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலையின்போது, கழக உடன்பிறப்புக்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டிருந்தனர்.மிசா வழக்குகளுக்காக நிதி திரட்டிய தலைவரிடம், எங்களது ஆதரவைத் தெரிவித்து சிறிய நிதி அளித்து, எங்கள் கிளைக் கழக முன்னோடிகளும் நானும் குடும்பத்துடன் தலைவருடன் படம் எடுத்துக் கொண்டோம். என்னுடைய குழந்தைகள் தங்கமணி, சரளா, சுந்தரமூர்த்தி ஆகியோர் இப்படத்தில் உள்ளனர்.

**- து.கோவிந்தசாமி, முன்னாள் வட்டக் கழகச் செயலாளர், தண்டையார்பேட்டை, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


#### மாணவர்களுக்குப் பயிற்சி வகுப்பு!

1944-ஆம் ஆண்டு, ஏப்ரல் 16, 17 தேதிகளில் திராவிட மாணவர்களின் முதலாவது பயிற்சி முகாம், ஈரோட்டில் பெரியார் மாளிகையில் நடைபெற்றது. பெரும்பான்மையான மாணவர்கள் வந்து கலந்துகொள்ள வேண்டுமென பெரியார் அழைப்பு விடுத்தார். அந்த முகாம் நிகழ்வுகளை அண்ணாவே முழுப் பொறுப்பேற்று, பயிற்சி வகுப்புகளை நடத்தினார். அங்கு பயிற்சி பெற்ற மாணவர்கள், அந்த ஆண்டு கோடை விடுமுறையின்போது, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சிறுசிறு குழுவினராகச் சென்று பிரச்சாரம் செய்தனர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

581

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங் கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131